0369

| DE | |
|---|---|
| DA | |
| SUPT | |
| DO | |
| JE | |

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை அவர்களின் செயல்முறை ஆணை,
பிறப்பிப்பவர் – திருமதி. ந. சாந்தி, எம்.இ.,

செயல்முறை ஆணை எண். 3138 / நிர்.3(2) / 2019 , நாள்.19.02.2024

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தொகுதி–IV பணி – 2015 – 2016, 2016 – 2017 மற்றும் 2017–2018 காலத்திற்கான காலிப் பணியிடங்கள் – இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – திரு.த. சஞ்சிவ்குமார், இளநிலை உதவியாளர் – பணியில் சேர்ந்தது – தனியரின் இனம் குறித்த உண்மைத் தன்மை அறிக்கை பெறப்பட்டது – தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்.

26 FEB 2024
சேலம்-5.

நாள் : 04.03.2024

பார்வை :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடிதம் எண். 1461/PSD-G2/2019, நாள்.01.04.2019.
2. முதன்மை இயக்குநர் (நெ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 3138 / நிர் 3(2) / 2019, நாள். 08.04.2019.
3. முதன்மை இயக்குநர்(நெ), சென்னை அவர்களின் கடித எண்.3138/ நிர். 3(2)/ 2019, நாள். 02.09.2020, 18.03.2022 (ம) 15.07.2022.
4. தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழு செயல்முறை ஆணை எண்.3864/CV-4(2)/2021-12, நாள்.02.02.2024.

---

பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் தொகுதி– IV பணியின் கீழ் 2015 – 2016, 2016 – 2017 மற்றும் 2017–2018 காலத்திற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனியருக்கு, பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில், தனியரின் பணிநியமனம் அவரது இனம் குறித்த உண்மைத் தன்மை தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழுவிடமிருந்து பெறப்படும் அறிக்கையின் முடிவுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன், இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்து உத்தரவு வழங்கப்பட்டது. அதன்படி, தனியர் கீழே அட்டவணையில் (கலம் 2–ல் குறிப்பிட்டுள்ள நாள்) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணியில் சேர்ந்துள்ளார்.

| பதிவு எண் / பெயர் / பிறந்த தேதி<br><br>திருவாளர்கள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 120702081<br>த. சஞ்சிவ்குமார்<br>07.06.1991 | 16.04.2019 மு.ப | 16.04.2019 மு.ப | சேலம் (நெ) சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், கோட்ட அலுவலகம். |

இந்நிலையில், தனியரின் இனம் குறித்த சான்றிதழ் உண்மைத் தன்மை சரியானது என பார்வை 4–ல் காணும் தமிழ்நாடு மாநில கூர்ந்தாய்வு குழுவின் செயல்முறை ஆணையில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு, தனியருக்கு அவர் பெயருக்கெதிரே அவர் இளநிலை உதவியாளராக பணியேற்பு செய்த நாள் முதல் (கலம் 3–ல் குறிப்பிட்டுள்ள நாள்) தேர்வாணையக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட நிபந்தனைகளை உள்ளடக்கி பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to combined Civil Services Examination-IV for the year 2015–16, 2016-17 and 2017-18 recruitment" .

மேலும், தற்போது வழங்கப்படும் பணி வரன்முறை உத்தரவின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியின் முதுநிலையில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது.

பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டுக்கால பணிக் காலத்தில் இரண்டாண்டுக்காலம் தகுதிகாண் பருவமாக வைக்கப்படும் எனவும், தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு பவானிசாகர் அரசு அலுவலர் அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ந. சாந்தி
முதன்மை இயககுநர்
நெடுஞ்சாலை.

பெறுநர்
திரு. த. சஞ்சிவ்குமார், இளநிலை உதவியாளர்,
சேலம் (நெ) சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், கோட்ட அலுவலகம்,
கோட்டப் பொறியாளர்(நெ), சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், சேலம் மூலமாக.

நகல் –
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3.
2. தலைமைப் பொறியாளர் (நெ) சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், சென்னை–25..
3. கண்காணிப்புப் பொறியாளர்(நெ), சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், திருச்சி
4. கோட்டப் பொறியாளர்(நெ), சென்னை கன்னியாகுமரி தொழிற்தட திட்டம், சேலம்.

//உண்மை நகல் //உத்தரவின்படி /அனுப்பப்படுகிறது//

ப.வாவண்யா 19.02.2024
கண்காணிப்பாளர்.

க.எண் .369 /அ. /2024 /நாள் : 01.03.24

அனுப்பப்படுகிறது.

1/3/24
கோட்டப் பொறியாளர் (நெ)
சென்னை-கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம்,
சேலம்-5.

1.3.24

01.03.2024

1/3/24

பெறுநர்

திரு. த. சஞ்சீவ்குமார்,
இளநிலை உதவியாளர்(நெ),
சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம்,
இராசிபுரம் பிரிவு-2
[உதவிக் கோட்டப் பொறியாளர்(நெ), சென்னை கன்னியாகுமரி தொழிற்தடத் திட்டம், நாமக்கல் மூலமாக]